# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

## SC.No.73/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 7 | நாள் | : | 14.08.2025 |
| பெயர் | : | ஆனந்தகுமார் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 14th day of August 2025.

1ம் எதிரி காணொளி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். 2ம் எதிரி ஆஜர் இல்லை 3ம் எதிரி ஆஜர் கு.வி.மு.ச 317 மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது தேனி மாவட்டம் வெங்கடாசலபுரத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். 1, 2 எதிரிகளையும் தெரியும். நான் தற்போது சென்னையில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். நான் 2013ம் ஆண்டு என் நண்பர் வீட்டிற்கு வந்திருந்தபோது அங்கு தொலைகாட்சியில் வெளிநாட்டிற்கு ஆட்களை அனுப்புவதாக விளம்பரம் வந்திருந்தது. நான் விளம்பரத்தை பார்த்துவிட்டு கரிவலம்வந்தநல்லூர் பயாட் பயிற்சி நிலையத்திற்கு சென்று கேட்டபோது கனடா நாட்டிற்கு ஓட்டுநர் வேலைக்கு ஆட்கள் எடுப்பதாகவும்

அதற்கு ரூ.75,000/- முன் பணம் செலுத்தவேண்டுமென்று கூறினார்கள். நான் மறுநாள் 19.02.2013 அன்று ரூ.60,000/-யையும் பின்னர் 26.02.2013 அன்று ரூ.15,000/- செலுத்தினேன். என்னுடைய கடவுச் சீட்டையும் ஒப்படைத்தேன் அதற்கு எனக்கு இரசீது வழங்கப்பட்டது. அந்த இரசீதை நான் நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேன். ஒப்புக்கொண்டதுபோல் என்னை வெளிநாட்டிற்கு அனுப்பவில்லை. தாமதம் ஆவதுபோல் தெரிந்ததால் கொடுத்த பணத்தை மீண்டும் ஒரு மாதம் கழித்து திரும்ப கேட்டேன். காரணம் சொல்லி தாமதப்படுத்தினார்கள். சுமார் 3 முறை மீண்டும் மீண்டும் வந்து கேட்டேன். அந்த பயிற்சி நிறுவனம் மூடப்பட்டதாக கேள்விப்பட்டேன். என்னுடைய கடவுச் சீட்டும் அங்கே இருந்ததால் அதன் மூலம் காவல் துணை கண்காணிப்பாளர் என்னை வரவழைத்து விசாரித்தார். கடவுச் சீட்டை சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தின் மூலம் திரும்ப பெற்றுக் கொண்டேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் கு.வி.**

2013 ஆண்டு டிசம்பர் மாதம் என்னை விசாரித்தார்கள். பயாட் நிறுவனம் முன்பாக நாங்கள் கூடியிருந்தபோது விசாரித்தார்கள். நான் தனிப்பட்ட முறையில் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. பயாட் நிறுவனத்தை ஒட்டியே கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். சங்கரன்கோவில் நண்பர் வீட்டிற்கு வந்து விளம்பரத்தை பார்த்து நேரில் சென்று விசாரித்து பணம் செலுத்தியதாக துணை கண்காணிப்பாளர் விசாரணையில்

சொல்லியிருக்கிறேன். கனடா நாட்டிற்கு ஓட்டுநர் வேலைக்காக பணம் கொடுத்தேன் என்று சொல்லியுள்ளேன். இரண்டு தவணைகளாக பணம் செலுத்தினேன் என்ற விவரத்தையும் கூறியுள்ளேன். போலீசார் விசாரணையின்போது பயாட் நிறுவன அலுவலகத்தில் பணத்தை கொடுத்ததாகதான் கூறியுள்ளேன். எங்கள் ஊரிலிருந்து சங்கரன்கோவிலுக்கு செல்ல வேண்டுமென்றால் பயாட் நிறுவனத்தை கடந்து செல்ல வேண்டுமென்றால் சரிதான். ஆனாலும் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் என் நண்பர் வீட்டிற்கு வந்ததாக கூறுவதும் அங்கே விளம்பரத்தை பார்த்துவிட்டு பயாட் நிறுவனத்தில் பணம் செலுத்தியதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.08.14 18:07:20 +0530